ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1879/20 - 2014 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2014.09.12
*1879/20 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபை**

(நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு).

***2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டம்***

*2014.07.22 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் கௌரவ தவிசாளர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*2014.08.06 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.*

*சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபை**

*2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர்
ஓய்வூதிய நியதிச் சட்டம்*

*2014.06.24 ஆந் திகதி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2014.08.06 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்ற இந்த நியதிச் சட்டம் அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.*

*லலித் தொடம்கொட்டுவ,*
*சபைச் செயலாளர்,*
*சபரகமுவ மாகாண மாகாண சபை.*

*சபரகமுவ மாகாண மாகாண சபை,*
*2014, செத்தெம்பர் 10.*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2 - PG 2164

**உத்தேச சபரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச்சட்ட வரைவு**

***சபரகமுவ மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டம்***

*சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திட்டமொன்றை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் அவர்களால் அந்த ஓய்வூதியத் திட்டம் சபரகமுவ மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் அக்கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்கள் தொடர்பில் ஏற்பாடுகளைச் செயவதற்குமானதொரு நியதிச் சட்டமாகும்.*

*சபரகமுவ மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது :*

*சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.*

*1. 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டமென அறிமுகப்படுத்தப்படுகின்ற இந்நியதிச் சட்டம் சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்படும் திகதி தொடக்கம் செயற்படும்.*

## I **ஆம் பகுதி**

கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தை ஸ்தாபித்தல்

*கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தை ஸ்தாபித்தல்.*

*2.* (i) *இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டமென அறிமுகப்படுத்தப்படுகின்ற திட்டமொன்று ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும் ;*

*சட்டமயமாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாதல் வேண்டும் என்பது பற்றி.*

(ii) *இந்த ஓய்வூதியத் திட்டமானது, தொடர்ச்சியானதொரு பரம்பரையையும் பொது முத்திரையொன்றையும் உடைய சட்டமயமாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாதல் வேண்டும். அத்துடன் அதன் சட்டரீதியான கூட்டுத்தாபனம் என்ற நிலையில் வழக்குகள் அல்லது சட்ட விவகாரங்களை முன்வைப்பதற்கும் வழக்குகள் மற்றும் ஏனைய சட்ட விவரகாரங்கள் தொடர்பில் விடுதலைக்கான காரணங்களைக் காட்டுவதற்கும், இந்நியதிச் சட்டத்தின் பணிகள் தொடர்பில் தேவையாகக்கூடிய அனைத்துச் செயல்களைச் செய்வதற்கும் அதிகாரமுடைய சட்டமயமாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாதல் வேண்டும்.*

*பணிப்பாளரை நியமனம் செய்தல்.*

*3.* (i) *கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தை நிர்வகிக்கும் பணிக்காக நிமித்த காலத்தில் சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதவியை வகிப்பவர் ஓய்வூதியத் திட்டத்தின் பணிப்பாளர் ஆவார் ;*

*பணிப்பாளரின் பணி.*

(ii) *பணிப்பாளர் ஓய்வூதியத் திட்டத்தின் விவகாரங்கள் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பில் பொறுப்பு கூறல் வேண்டும் ;*

*ஆலோசனைக் குழுவை நியமனம் செய்தல்.*

(iii) *ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பில் பணிப்பாளருக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சிபார்சுகளை பெற்றுக் கொடுத்தல் ஆகிய பணிகளுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு ஏழு பேர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவொன்று இருத்தல் வேண்டும். இந்த அங்கத்தவர்களுள் 3. IV ஆம் உட்பிரிவின் (ஊ) உட்பிரிவின்கீழ் காட்டப்பட்டுள்ள அங்கத்தவர்கள் அமைச்சரால் நியமனம் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அமைச்சரால் நியமனம் பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும் ;*

(iv) *ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களாக :-*

*(அ) சபரகமுவ மாகாண சபையின் கூட்டுறவு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்;*

*(ஆ) சபரகமுவ மாகண சபையின் பிரதி பிரதான செயலாளர் (நிதி) ;*

*(இ) தொழில் ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற அத்திணைக்களத்தின் நிறைவேற்றுநிலை உத்தியோகத்தர் ஒருவர் ;*

*(ஈ) சபரகமுவ மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் ;*

*(உ) வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் கூட்டுறவுச் சபைகளின் இரு தவிசாளர்கள் ;*

(ஊ) சபரகமுவ மாகணத்தின் கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்ற 20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவை அனுபவம் உடைய தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது ஓய்வுபெற்ற அல்லது சட்டரீதியான விசாரணையொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்படாத சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது கூட்டுச் சங்கமொன்றின் நிறைவேற்றுநிலை உத்தியோகத்தர் ஒருவர் (நியமனம் செய்யப்படுதல் வேண்டும். ).

(v) ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின்படி சபரகமுவ மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை மாத்திரம் ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்தும் பணிக்கான பணியாட்டொகுதியாக ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும். பணியாட்டொகுதி.

4. (i) (அ) இந்நியதிச் சட்டத்தின் 3. IV ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களின் பதவிக் காலமானது, அந்த உத்தியோகப் பதவிகளை வகிக்கும் காலகட்டத்திற்கு எல்லைப்படுத்தப்படும். ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களின் தகைமைகளும் பதவிக்காலமும்.

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் 3. IV ஆம் பிரிவின் (இ) உட்பிரிவின்கீழ் நியமனமாகும் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் தொழில் ஆணையாளர் நாயகம் ஆகும் சந்தர்ப்பமொன்றில் அவரது பதவிக் காலமானது, உத்தியோகப் பதவியை வகிக்கும் காலகட்டத்திற்கு எல்லைப்படுத்தப்படும். தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களால் பெயர் குறிப்பிடப்படுகின்ற அத்திணைக்களத்தின் நிறைவேற்று நிலையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவாராயின் அவரது பதவிக் காலமானது, இறப்பு அல்லது இராஜினாமா என்பன காரணமாக பதவி வெற்றிடம் ஏற்பட்டாலன்றி 03 ஆண்டு காலகட்டமாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களால் ஏனையவொரு உத்தியோகத்தர் நியமனம் செய்யப்படுதல் மூலம் முன்னர் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் நியமனம் இல்லாதொழியும் ;

(இ) இந்நியதிச்சட்டத்தின் 3. IV ஆம் பிரிவின் (ஊ) உட்பிரிவின்கீழ் ஆலோசனைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற அங்கத்தவர் ஒருவரின் இறப்பு அல்லது ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அமைச்சரிடம் அனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் இராஜினாமாச் செய்யும் போது அல்லது அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்படும் போது பதவி வெற்றிடம் ஏற்பட்டாலன்றி 3 ஆண்டு காலகட்டமொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும் ;

(ii) ஆலோசனைக் குழுவின் 3. IV ஆம் பிரிவின் (ஊ) உட்பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஓர் அங்கத்தவரால் மேற்கூறியவாறு பதவி வெற்றிடம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றில் 03. III ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு அவருக்குப் பதிலாக ஏனைய ஒருவர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அந்த அங்கத்தவர் தாம் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காரணமான பதிலாளின் எஞ்சியுள்ள பதவிக்காலத்திற்காக மாத்திரம் பதவி வகித்தல் வேண்டும் ;

(iii) சுகவீனமடைதல் அல்லது இலங்கையிலிருந்து வெளியேறி இருத்தல் காரணமாக அல்லது ஏனைய ஏதாவதொரு காரணமாக, ஆலோசனைக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அங்கத்தவர் ஒருவருக்கு தமது பணிகளைப் புரிவதற்கு இயலாதிருப்பது பற்றி அறிந்து கொள்ளப்பட்டால் அவருக்குப் பதிலாக கடமைகளை நிறைவேற்றும் நபர் பதில் கடமை புரிவதற்காக அமைச்சரால் நியமனம் செய்யப்படலாம் ;

(iv) பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட அங்கத்தவர் ஒருவர் தவிர்ந்த பதவி வெற்றிடமாக்கும் ஆலோசனைக் குழுவின் எவரேனும் ஓர் அங்கத்தவர் மீளவும் நியமனம் செய்யப்படுவதற்கு தகைமை உடையவராக இருப்பார்.

5. ஆலோசனைக் குழுவினால் பின்வரும் எல்லா அதிகாரங்களும் அல்லது அவற்றுள் சில அதிகாரங்கள் செயற்படுத்தப்படலாம். ஆலோசனைக் குழுவின் பணிகள்.

(i) இந்த ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கொள்கைகளை ஒழுங்கு செய்தல் ;

(ii) இந்த ஓய்வூதியத் திட்டத்தை முகாமைத்துவம் செய்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகிய பணிகளுக்கு ஏற்புடைய காரணங்கள் தொடர்பில் பணிப்பாளருக்கு ஆலோசனைகளை வழங்குதல் ;

(iii) இந்த ஓய்வூதியத் திட்டத்தின் விவகாரங்களை மீளாய்வு செய்தல்.

ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள்.

6. (i) கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஆலோசனைக் குழுவின் அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல் வேண்டும். ஆலோசனைக் குழுவின் ஏதாவதொரு கூட்டத்திற்கு அவர் சமுகமளிக்காதிருக்கும் சந்தர்ப்பமொன்றில், ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களுள் நியமனம் செய்யப்படும் ஓர் அங்கத்தவர் கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும் ;

(ii) பணிப்பாளர் ஆலோசனைக் குழுவின் செயலாளர் ஆவார். ஆவரால் ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் அக்கூட்டங்கள் இந்நியதிச் சட்டத்தின்கீழ் ஓய்வூதியத் திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றும் பணிக்காகத் தேவைப்படக்கூடிய வகையில் நடத்தப்படுதல் வேண்டும் ;

பதவி வெற்றிடம்/ வெற்றிடங்கள்.

(iii) ஆலோசனைக் குழுவினால் பதவியொன்று/பதவிகள் நிலவும் சந்தர்ப்பம் ஒன்றில் மேற்கூறிய ஆலோசனைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் எதுவும் மேற்கூறிய பதவி வெற்றிடங்கள் காரணமாக செல்லுபடியற்றதாகாமல் இருக்கும் ;

நிறைவெண்.

(iv) ஆலோசனைக் குழுவின் கூட்டமொன்றின் நிறைவெண் (கூட்ட நடப்பெண்) ஆனது, ஆகக் குறைந்தது நான்கு அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

பணிப்பாளரினதும் ஆலோசனைக் குழுவினதும் பணியாட்டொகுதியினதும் உழைப்புப்படி.

7. (i) பணிப்பாளரால் ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்தப்படுதல், பணிகள் மேற்கொள்ளப்படுதல் என்பன தொடர்பில் அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற உழைப்புப் படியொன்று செலுத்தப்படலாம் ;

(ii) ஆலோசனைக் குழுவின் கூட்டங்களுக்கு சமுகமளித்தல் தொடர்பில் ஆலோசனைக்குழு அங்கத்தவர்களுக்கு அமைச்சர் அவர்களின் அனுமதியுடன் பணிப்பாளரால் உழைப்புப்படியொன்று செலுத்தப்படலாம். ஆலோசனைக்குழுவின் அனுமதியுடன் ஆலோசனைக்குழுவின் விவகாரங்கள் தொடர்பான பணிகளுக்காக அங்கத்தவர்களால் செலவிடப்படக்கூடிய பிரயாண மற்றும் ஏனைய செலவினங்கள் பணிப்பாளரால் அந்த அங்கத்தவர்களிடம் செலுத்தப்படல் வேண்டும் ;

(iii) ஆலோசனைக் குழுவினால் நிச்சயிக்கப்படுகின்ற உழைப்புப் படிகளும் ஏனைய செலவினங்களும் சேவையில் ஈடுபடுத்திக் கொள்பவர்களுக்கு செலுத்தப்படல் வேண்டும்.

## II ஆம் பகுதி

### கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்தல்

ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான தகைமைகள்.

8. இந்நியதிச் சட்டம் செயற்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் சேவையில் சேர்ந்து இதுவரை சேவையில் ஈடுபட்டுள்ள 18 வயதுக்குக் குறையாத அத்துடன் 60 வயது வரையிலான நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுள்ள கூட்டுறவு ஊழியர் ஒருவருக்கு இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம் .

கட்டாயமாக ஓய்வூதியத் திட்டத்தில் சேர வேண்டும் என்பது பற்றி.

9. இந்த நியதிச்சட்டம் செயற்படுத்தப்பட்ட திகதி தொடக்கம் நிரந்தர சேவையில் சேரும் கூட்டுறவு ஊழியர்கள் அனைவரும் கட்டாயமாக இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளல் வேண்டும்.

ஓய்வூதியத் திட்டத்தின் பிரதிபலன்கள்.

10. (i) இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் (இதனகத்து இதன்பின் சந்தாக்காரர் என அறிமுகப்படுத்தப்படுகின்ற) கூட்டுறவு ஊழியர் ஒருவர் கட்டளைகள் மூலம் விதிக்கப்படும் அடிப்படையில் இந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பிரதிலாபங்கள் பெறுவதற்கு உரிமையுள்ளவராக இருப்பார்.

(அ) விதிக்கப்படக்கூடிய வகையில் சேவைக் காலகட்டமொன்றின்படியான ஓர் ஓய்வூதியம் ;

(ஆ) விதிக்கப்படக்கூடிய வகையில் சேவைக்கால கட்டங்களின்படியான இதனகத்து இதன்பின் பணிக்கொடை என அறிமுகப்படுத்தப்படுகின்ற பணிக்கொடையொன்று ;

(ii) சந்தாக்கால எல்லையானது, சந்தாக்காரரின் வயது மற்றும் சந்தாக்காரரால் செலுத்தப்பட்ட சந்தாப்பணத்தின் அளவு என்பனவற்றைக் கவனத்திற்கொண்டு அவற்றின் அடிப்படையாக ஓய்வூதியம் அல்லது மரண பணிக்கொடை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

11.(i) சந்தாக்காரர் 60 வயதை அடையும்போது ஓய்வூதியம் பெற உரிமையுடைவராதல் வேண்டும். அவ்வாறாயினும் தமது சந்தாப்பணம் செலுத்தலை ஆரம்பித்த சந்தாக்காரர் ஒருவர் ; அவரது குறிப்பிட்ட முழுச்சந்தாப் பணத்தொகையும் செலுத்தி முடித்தாலும் ஓய்வூதியத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 06 மாதங்கள் சென்ற பின்னரே அவருக்கு ஓய்வூதியம் பெற உரிமை கிடைக்கும். *ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம்.*

(ii) சந்தாக்காரர் மாதத்தில் எத்தினத்தில் இறந்தாலும் அம்மாதத்தின் இறுதிவரை ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும்.

12. தமது ஓய்வூதியத்தைப் பெற உரிமை பெறுவதற்கு முன்னரான ஒரு தினத்தில் சந்தாக்காரர் இறக்கும் சந்தர்ப்பமொன்றில் கட்டளைகளில் விதிக்கப்படும் வகையில், சந்தாக்காரரை அண்டி வாழ்ந்தவர்களுக்கு மரணப் பணிக்கொடை செலுத்தப்படல் வேண்டும். *மரண பணிக் கொடை.*

13.(i) தமது ஓய்வூதியத்தைப் பெற உரிமை பெறுதற்குமுன் சந்தாக்காரர் ஒருவர் தமது தொழில் வழங்குநரான கூட்டுறவுச் சங்கத்துக்கு அல்லது கூட்டுச் சங்கத்துக்கு ஏதாவதொரு நட்டத்தை ஏற்படுத்தி இருப்பதைப் பற்றி இந் நியதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவில் பொருள் கூறப்பட்டுள்ளவாறு நடத்தப்படுகின்ற சட்டரீதியான விசாரணை ஒன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பின், இந்நியதிச் சட்டத்தின்கீழ் அவர் எந்தவொரு பிரதிலாபத்தையோ அல்லது ஓய்வூதியத்தையோ பெற உரிமையற்றவராக இருப்பார். அவ்வாறாயினும் சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு ஏற்படுத்திய நட்டத்தைச் செலுத்தி ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்திருப்பதற்கு, இடப்படும் கட்டளைகளின்படியும் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படியும் சந்தாரக்காரருக்கு உரிமை இருத்தல் வேண்டும். *ஓய்வூதியம் பெற உரிமை இல்லாமல் போதல்.*

(ii) (அ) எவரேனுமொரு சந்தாக்காரர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் சந்தர்ப்பமொன்றில் தமது சேவை வழங்குநரான கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு அல்லது கூட்டுச் சங்கமொன்றிற்கு நட்டமொன்றை ஏற்படுத்தி அவருக்கு எதிராக 13.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டரீதியான விசாரணையொன்று நடைபெறுமாயின் அவ்விசாரணை முடிவடையும்வரை நியதிச்சட்டத்தின் கீழ் அந்த சந்தாக்காரருக்குச் செலுத்தவேண்டிய ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தும் அதிகாரம் பணிப்பாளருக்கு இருக்கும் ; *ஓய்வூதியம் பெற உரிமை இல்லாமல் போதல்.*

(ஆ) 13. II. (அ) பிரிவின்கீழ் சந்தாக்காரருக்கு எதிராக நடத்தப்படுகின்ற சட்டரீதியான விசாரணையொன்று 06 மாதங்களுக்கு மேல் தாமதமடைந்தால், ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தின்படி ஓய்வூதியத்தின் ஒரு பகுதி அல்லது முழுமையான ஓய்வூதியம் சந்தாக்காரருக்குச் செலுத்தப்படலாம் ;

(இ) மேற்கூறிய சந்தாக்காரர் தொடர்பில் நடத்தப்படுகின்ற விசாரணையில் சந்தக்காரர் விடுதலையடைந்தால் அவர் ஓய்வுபெற்ற திகதி தொடக்கம் செயற்படும் வகையில் ஓய்வூதியத்தையும் பெறுவதற்கு சந்தாக்காரர் உரிமையுடையவராவார் ;

14.(i) எவரேனுமொரு கூட்டுறவுச் சங்க ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர் ஒருவராக சேர்த்துக் கொள்ளப்பட்ட போது பணிப்பாளரால் சந்தாக்காரரிடம் சான்றிதற் பத்திரமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதில் சந்தாக்காரரால், *ஒவ்வொரு சந்தாக் காரரிடமும் பணிப்பாளரால் சான்றிதற் பத்திர மொன்று வழங்கப் படுதல் வேண்டும் என்பது பற்றி.*

(அ) செலுத்தப்பட வேண்டிய சந்தாப்பணத்தொகை ;

(ஆ) கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய சந்தாப்பணத் தொகை ;

(இ) சான்றிதழ் பத்திரத்தின் விதிகள் அல்லது நிபந்தனைகள் ;

(ஈ) சந்தாக்காரிடம் வழங்கப்பட்ட சான்றிதற் பத்திரத்தின் கீழ் சந்தாக்காரருக்கு உரித்தாகும் பிரதிலாபங்கள் ஆகிய விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) சந்தாக்காரரினால் இடைக்கிடையே அல்லது தொடர்ச்சியாக ஏதாவதொரு தினத்திற்கு 03 முறை தவணைப் பணத்தொகைகள் செலுத்தலைப் புறக்கணிக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அவரிடம் வழங்கப்பட்டுள்ள சான்றிதற் பத்திரத்தின்கீழான பிரதிலாபங்கள் பெறும் உரிமை இல்லாதொழிதல் வேண்டும் ;

(iii) எவரேனுமொரு சந்தாக்காரரிடம் வழங்கப்பட்டுள்ள சான்றிதற் பத்திரத்தின் கீழ் பிரதிலாபங்கள் பெறும் உரிமை அந்த சந்தாக்காரருக்கு இல்லாமல் போகவுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அதைப்பற்றிய அறிவித்தலொன்று பணிப்பாளரால் அந்த சந்தாக்காரரிடம் வழங்கப்படுதல் வேண்டும் ;

(iv) கட்டளைகளின்படி விதிக்கப்படுகின்ற ஒழுங்குமுறை ஒன்றின்படி சந்தாக்காரருக்கு தமது சான்றிதற் பத்திரத்தை செல்லுபடியாக்கிக் கொள்வதற்காக பணிப்பாளரிடம் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கும் உரிமை இருத்தல் வேண்டும். தவணைப் பணம் செலுத்தத் தவறும் காரணங்களை சந்தாக்காரருக்கு கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதிருக்கும் நிலைமையைப் பற்றி பணிப்பாளர் திருப்தியடைந்தால் பணிப்பாளரால் சான்றிதற் பத்திரம் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும் ;

(v) சான்றிதற் பத்திரத்தைச் செல்லுபடியாக்குவதற்கு பணிப்பாளர் தீர்மானிக்கும் சந்தர்ப்பமொன்றில், சந்தாப் பணத்தொகை எத்தினத்திற்கு முன் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளதோ அத்தினத்தைச் சந்தாக்காரரிடம் அறிவித்தல் வேண்டும். அத்தினத்திற்கு முன் மேற்கூறிய சந்தாப்பணத்தொகையைச் செலுத்தத் தவறினால் அவரது சான்றிதற் பத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சந்தாப்பணம்.*

15. கட்டளைகள் மூலம் விதிக்கப்படும் பணிப்புகளின்படி இந்த ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாப் பணத்தொகைகள் சந்தாக்காரரால் அல்லது தொடர்புடைய கூட்டுறவுச் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது கூட்டுச் சங்கமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள இந்த ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர்களால் செலுத்தப்படுகின்ற சந்தாப் பணத்தொகைகள் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் ஓய்வூதியத் திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இக்கட்டளைகளின்படி எத்தினத்திற்கு முன் சந்தாப்பணம் செலுத்த வேண்டியதாக உள்ளதோ அத்தினம் கட்டாயமாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது கூட்டுச் சங்கமொன்று குறிப்பிட்ட தினத்திற்கு சந்தாப்பணம் செலுத்தாமல் இருந்தால், கட்டளைகளின்படி விதிக்கப்படும் தண்டப் பணத்தொகை ஒன்றும் செலுத்தல் வேண்டும்.

*கூட்டுறவுச் சங்கங்களை அல்லது கூட்டுச் சங்கங்களை ஒழித்துக் கட்டுதல்.*

16. (i) ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்தை அல்லது கூட்டுச் சங்கத்தை சட்டரீதியில் ஒழித்துக்கட்டுவதற்காக அதன் பதிவை இரத்துச் செய்துள்ள சந்தர்ப்பமொன்றில் அச்சங்கம் அல்லது கூட்டுச் சங்கம் பதிவை இரத்துச் செய்யும்வரை சந்தாக்காரரால் பணம் செலுத்தப்பட்டிருப்பின் கட்டளைகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும் ;

*ஒருங்கிணைத்தல், பிரித்தல் காரணமாக ஓய்வூதியம் பெறும் உரிமை இல்லாமல் போகாது என்பது பற்றி.*

(ii) ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கம் சட்டரீதியில் ஏனைய ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்துடன் அல்லது கூட்டுச் சங்கத்துடன் ஒன்றிணையுமாயின் அத்துடன் ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கம் சட்டரீதியில் ஏனைய ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அல்லது கூட்டுச் சங்கத்திலிருந்து விலகுமாயின் சந்தாக்காரருக்கு இந்த ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியம் பெறும் உரிமை இல்லாமல் போகுமெனக் கருதப்படாதிருத்தல் வேண்டும் அத்துடன் புதிய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கத்தினால் சந்தாக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து இருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

*அளித்தலை பணிப்பாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பது பற்றி.*

17. கட்டளைகளின் மூலம் விதிக்கப்படும் விதிகளின்படி எவரேனுமொரு சந்தாக்காரருக்கு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பிரதிலாபங்களை அளித்தலை பணிப்பாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

18. (i) பணிப்பாளரின் தீர்மானங்கள் தொடர்பில் திருப்தியடையாத எவரேனுமொரு சந்தாக்காரருக்கு, மேன் முறையீடு செய்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் வகையில் ஐந்து பேர்கள் அடங்கிய மேன்முறையீட்டுச் சபையொன்று கௌரவ அமைச்சரால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் ;

*மேன்முறையீட்டுச் சபை.*

*மேன்முறையீட்டுச் சபையின் அமைப்பு.*

(ii) மேன் முறையீட்டுச் சபையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அடங்கியிருத்தல் வேண்டும். (சபரகமுவ மாகாண அங்கத்தவர்கள்).

(அ) சபரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளர். (நிர்வாக) ;

(ஆ) சபரகமுவ மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் ;

(இ) அமைச்சரால் தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களிடம் வினவப்பட்டு நியமனம் செய்யப்படும் தொழில் திணைக்களத்தின் நிறைவேற்று நிலை உத்தியோகத்தர் ஒருவர் ;

(ஈ) அமைச்சரால் நியமனம் செய்யப்படும் 20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலமுடைய, சட்டரீதியான விசாரணையொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்படாத, சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது கூட்டுச் சங்கமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள இரு உத்தியோகத்தர்கள் (இ, ஈ ஆகிய பிரிவுகளின்கீழ் நியமனம் செய்யப்படும் அங்கத்தவர்கள் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களாக இருத்தல் ) கூடாது.

(iii) மேன்முறையீட்டுச் சபையின் நிறைவெண் (கூட்ட நடப்பெண்) மூன்று அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும் ; நிறைவெண்.

(iv) பணிப்பாளரின் தீர்ப்பு தொடர்பில் திருப்தியடையாத எவரேனுமொரு சந்தாக்காரருக்கு பணிப்பாளரின் தீர்ப்பு கிடைத்து 30 நாட்களுக்குள் தமது மேன்முறையீட்டிற்கான காரணங்களைக் குறிப்பிட்டு மேன்முறையீடொன்று மேன்முறையீட்டுச் சபையிடம் சமர்ப்பிக்கப்படலாம். 30 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்யப்பட வேண்டுமென்பது பற்றி.

(v) மேன்முறையீடு கிடைத்து 90 நாட்களுக்குள் மேன்முறையீட்டுச் சபையின் தீர்ப்பை மேன்முறையீட்டாளரிம் அறிவித்தல் வேண்டும். 90 நாட்களுக்குள் மேன்முறையீட்டுத் தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது பற்றி.

(vi) அத்தகைய மேன்முறையீடொன்று தொடர்பாக மேன்முறையீட்டுச் சபையின் தீர்ப்பு இறுதியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

19. ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் செலுத்தப்படக்கூடிய எந்தவொரு ஓய்வூதியமும் ஏனைய ஒருவரிடமும் ஒப்படைப்பதோ அல்லது பராதீனப்படுத்தலோ கூடாது. அத்துடன் அத்தகைய ஒவ்வொரு ஒப்படைப்பும் அல்லது பராதீனப்படுத்தலும் முழுமையாகச் செல்லுபடியற்ற அத்துடன் அதிகாரமற்றதாக இருக்கும். இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டளைகளின் கீழ் அல்லது பணிப்பாளரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழே தவிர ஏனையோர்களுக்கு ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை அல்லது கொடுப்பனவொன்று செலுத்தப்பட வேண்டியவரிடமிருந்து வரவேண்டிய ஏதாவதொரு கடன் அல்லது பணத்தொகை தொடர்பில் அத்தகைய ஓய்வூதியமொன்று அல்லது பணிக்கொடையொன்று அல்லது கொடுப்பனவொன்று தடை செய்யப்படுதல் அல்லது எழுத்தாணை ஒன்றைச் செயற்படுத்துவதன் மூலம் அறவிட்டுக் கொள்ளல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும். ஓய்வூதியம், கொடுப்பனவு அல்லது பணிக் கொடை ஒப்படைக் கப்படுதல் அல்லது அதிலிருந்து அற விட்டுக் கொள்ளல் என்பன செய்யப் படாதிருத்தல் வேண்டும்.

## III ஆம் பகுதி

### கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம்

20. (i) இதனகத்து இதன்பின் நிதியம் என குறியீடு செய்யப்படுகின்ற கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும் ; கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம்.

(ii) அந்த நிதியத்திடம் :

(அ) கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் காலத்துக்குக் காலம் சபரகமுவ மாகாண கூட்டுறவு நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்படும் பணத்தொகைகள் ;

(ஆ) ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக சபரகமுவ மாகாண சபையினால் காலத்துக்குக் காலம் அங்கீகரித்துக் கொள்ளப்படும் பணத்தொகைகள் ;

(இ) நிதிவிடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சரால் காலத்துக்குக்காலம் பணிப்பாளரிடம் முற்பணங்களாக அல்லது நிரந்தர அளிப்புகளாகக் கையளிக்கப்படக்கூடிய பணத்தொகைகள் ;

(ஈ) கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் வருடாந்தம் அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் அளிப்புகள் ;

(உ) ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அல்லது கூட்டுச் சங்கமொன்றின் மூலம் கையளிக்கப்படும் பணத்தொகைகள் ;

(ஊ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தமது அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கையிலும், பணிகளைப் புரிகையிலும் பெறப்படும் அனைத்துப் பணத்தொகைகள் ;

(எ) பரிசுகள், அர்ப்பணிப்புகள் மூலமாக அல்லது ஏனைய ஏதாவதொரு மூலாதாரத்திலிருந்து கிடைக்கப்பெறும் அனைத்துப் பணத்தொகைகள் ;

(ஏ) ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர்களினால் மாதாந்தச் சந்தாப் பணமாக ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்தப்படும் அனைத்துப் பணத்தொகைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுச் சங்கங்களின் மூலம் மாதாந்தம் செலுத்தப்படும் சந்தாப் பணத்தொகைகள் ;

(ஐ) ஊழியர் ஒருவர் ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தர்ப்பத்தில் ஊழியராலும் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினாலும் செலுத்தப்படும் ஆரம்பக் கட்டணங்கள் உட்பட பணத்தொகைகள் ;

(ஒ) முதலீடுகளின் மூலம் வட்டிப் பணத்தொகைகளாக அல்லது இலாபங்களாகப் பெற்றுக் கொள்ளப்படும் அனைத்துப் பணத்தொகைகள் ;

(ஓ) நிதியத்திடம் பரிசுகளாகவும் அன்பளிப்புகளாகவும் ஏதாவதொரு மூலாதாரத்திலிருந்து கிடைக்கப்பெறும் அனைத்துப் பணத்தொகைகள் மற்றும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுகையில் பணிப்பாளரிடம் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுச் சங்கங்கள் ஆகிய நிறுவனங்களிடமிருந்து முற்பணங்களாகக் கிடைக்கக்கூடிய பணத்தொகைகள்.

(iii) இந்த நிதியத்தின் விவகாரங்களைச் செயற்படுத்துவதற்காக அரசாங்க வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கொன்றைப் பேணிச் செல்லல் வேண்டும். அத்துடன் நிதியத்திற்குக் கிடைக்கும் எல்லாப் பணத்தொகைகளும் இந் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஆலோசனைக் குழுவினதும் பணிப்பாளரினதும் அதிகாரங்களைச் செயற்படுத்துகையிலும், பணிகளைப் புரிகையிலும், கடமைகளை நிறைவேற்றுகையிலும் ஆலோசனைக் குழுவினால் அல்லது பணிப்பாளரால் செலவிடப்பட்ட எவையேனும் மீளளிப்பதற்குத் தேவையான அனைத்துப் பணத்தொகைகளும் இந்நியதிச் சட்டத்தின் மூலம் அல்லது கட்டளைகளின் கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம் ;

(v) இந் நிதியத்தின் அனைத்துப் பணங்களும் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் செலுத்தல், ஓய்வூதிய நிதியத்துடன் தொடர்புடைய பணிகளுக்காக செலவிடுதல் ஆகிய பணிகளுக்காகவே தவிர ஏனைய எந்தவொரு கருமத்திற்காகவும் உபயோகிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

நிதி முதலீடு செய்தல்.

21. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பணிப்பாளருக்கு உடனடியாகத் தேவைப்படக்கூடிய நிதியத்தின் அனைத்துப் பணத்தொகைகளும் ஆலோசனைக்குழுவின் தீர்மானத்தின்படி பணிப்பாளரால் அரசாங்க வங்கியொன்றில் அல்லது அரசாங்க நிதி நிறுவனமொன்றில் அல்லது மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கியொன்றில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

கடன்களாகப் பணங்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம்.

22. பணிப்பாளரால் ஆலோசனைக் குழுவின் தீர்ப்புடன் பணிப்பாளரின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பணிப்பாளருக்குத் தேவையான பணத்தொகைகள் வங்கியின் மேலதிகப் பற்றுகள் மூலமாக அல்லது ஏனையவொரு வகையில் கூட்டுறவுச் சங்கமொன்றிலிருந்து அல்லது கூட்டுச் சங்கமொன்றிலிருந்து அல்லது அரச நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து கடன்களாகப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

நிதியாண்டுக் கணக்குகள்.

23. (i) ஓய்வூதியத் திட்டத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும் ;

(ii) பணிப்பாளரால் ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நிலவிய வகையில் ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை சமநிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அத்தினத்தில் வருமான மற்றும் செலவினக் கணக்கொன்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சுருக்கம் ஒன்றும் அடங்கிய நிலுவைப் பத்திரமொன்று அடுத்துவரும் ஆண்டின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(iii) 23. II ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அந்த ஆண்டின் யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் மாகாண சபையிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ; கணக்குகளை மாகாண சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பது பற்றி.

(iv) ஒவ்வொரு ஆண்டிலும் ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை மாகாண சபையின் கணக்காய்வு விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் அல்லது சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். கணக்குகளை ஆய்வு செய்தல்.

## IVஆம் பகுதி

### ஏனைய விவகாரங்கள்

24. (i) சில சமயங்களில் விதிக்கப்படுமென அல்லது விதிக்கப்படவேண்டுமென இந் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பில் அமைச்சரால் கட்டளைகள் ஒழுங்கு செய்யப்படலாம்.

(அ) ஓய்வூதியத் திட்டத்தைச் சீர் செய்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ;

(ஆ) கூட்டுறவு ஊழியர் ஒருவர் எந்த தகைமைகள் அடிப்படையில், எந்த நிபந்தனைகளுக்கு இணங்க அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற காரணங்கள் உட்பட எத்தகைய வரையறைகளின் கீழ் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்குத் தகைமை பெற வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்;

(இ) சந்தாக்காரர்களினாலும் அவர்கள் தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுச் சங்கங்கள் என்பனவற்றினால் செலுத்தப்பட வேண்டிய பணத்தொகைகளின் அளவுகளைத் தீர்மானித்தல் ;

(ஈ) சந்தாக்காரர்களுக்கு ஓய்வூதியப் பணிக்கொடைகள் அல்லது கொடுப்பனவுகளை செலுத்தும் அடிப்படையைத் தீர்மானித்தல் ;

(உ) சந்தாப்பணம் செலுத்தலைப் புறக்கணித்தல் தொடர்பில் நிபந்தனைகளைத் தீர்மானித்தல் ;

(ஊ) ஆலோசனைக் குழுவின் விவகாரங்கள் தொடர்பான பணித்திட்டங்களையும் விதிகளையும் ஒழுங்கு செய்தல் ;

(எ) மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் தொடர்பான பணித்திட்டங்களையும் விதிகளையும் ஒழுங்கு செய்தல் ;

(ஏ) ஓய்வூதிய உரித்துச் சான்றிதழை முடிவடையச் செய்தல் அல்லது உரிமையற்றதாக்குதல் ;

(ஐ) மரணப் பணிக்கொடையைச் செலுத்தும் அடிப்படையையும் அளவையும் தீர்மானித்தல் ;

(ஒ) ஏற்புடைய படிவங்களைத் தீர்மானித்தல் ;

(ii) அமைச்சரால் ஒழுங்கு செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு பிரசுரிக்கப்படும் திகதியில் அல்லது கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பின்பொரு தினத்தில் அது செயற்படுதல் வேண்டும் ;

(iii) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்பு எவ்வித தாமதமுமின்றி அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மாகாண சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்ற ஏதாவதொரு கட்டளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும். மேற்கூறியவாறு அங்கீகரிக்கப்படாத ஏதாவதொரு கட்டளை, அக்கட்டளையின் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படாதவாறு அந்த அங்கீகரிக்கப்பட்ட திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஏதாவதொரு கட்டளை அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

இந்நியதிச் சட்டத் தின் கீழ் அல்லது பணிப்பாளரின் கட்டளைகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக் கான பாதுகாப்பு.

25. (i) பணிப்பாளர் அல்லது ஆலோசனைக்குழு, ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது மேன்முறையீட்டுச் சபையினால் இந் நியதிச் சட்டத்தின் கீழ் நேர்மையான முறையில் செய்யப்பட்ட ஏதாவதொரு செயல் தொடர்பில் பணிப்பாளருக்கு அல்லது ஆலோசனைக் குழுவிற்கு, குழுவின் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது மேன்முறையீட்டுச் சபைக்கு அல்லது மேன்முறையீட்டுச் சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது ;

(ii) பணிப்பாளரின் அல்லது ஆலோசனைக் குழுவின் அல்லது மேன்முறையீட்டுச் சபையின் கட்டளையொன்றின்படி நேர்மையான முறையில் செய்யப்பட்ட அல்லது அவ்வாறு கருதப்பட்ட ஏதாவதொரு செயலுக்காக அல்லது ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உதவி செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு எதிராக ஏதாவதொரு சிவில் வழக்கு அல்லது குற்றவியல் வழக்கு தொடர இயலாதிருத்தல் வேண்டும்.

தண்டனைகள்.

26. இந்நியதிச் சட்டத்தின் கீழான ஓர் ஏற்பாட்டை அல்லது நியதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதாவதொரு கட்டளையை, ஏற்பாட்டை மீறும் அல்லது அதன்படி செயற்படாமல் புறக்கணிக்கும் எந்தவொரு நபரும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவதுடன் மாஜிஸ்திரேட் நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்க முறையிலான வழக்கு விசாரணை ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால கட்டமொன்று சிறைத் தண்டனைக்கு அல்லது 1500 ரூபா தண்டப் பணத் தொகையொன்றைச் செலுத்துவதற்கு அல்லது இந்த இருவகையான தண்டனைகளுள் ஒருவகை தண்டனைக்கு ஆளாக்கப்படலாம்.

பொருள் கூறல்.

27. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச்சட்டத்தில்,

"மாகாண சபை" சபரகமுவ மாகாண சபையைப் பொருட்படுத்தும்.

"அமைச்சர்" என்பது, நிமித்த காலத்தில் சபரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழும் சபரகமுவ மாகாண சபையின் திருத்தங்களுடனும் வாசிக்கவேண்டிய 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச்சட்டத்தின் கீழும் சபரகமுவ மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம்/கூட்டுறவு கூட்டுச் சங்கம் என பொருள்படும்.

"கூட்டுறவு கூட்டுச் சங்கம்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழும் சபரகமுவ மாகாண சபையின் திருத்தங்களுடனும் வாசிக்க வேண்டிய 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழும் சபரகமுவ மாகாணத்தின் பதிவு செய்யப்பட்ட சில கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றைப் பொருட்படுத்தும்.

"ஊழியர்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 51 ஆம்இலக்க, திருத்தச் சட்டத்துடன் வாசிக்க வேண்டிய 1972 ஆம் ஆண்டின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் வரைவிலக்கணத்தின்படி கூட்டுறவுச் சங்கமொன்றின்/ கூட்டுச் சங்கமொன்றின் நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுக் கொண்டுள்ள ஊழியர் ஒருவரைப் பொருட்படுத்தும்.

*"சட்டரீதியான விசாரணை" என்பது, 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, திருத்தச் சட்டத்துடன் வாசிக்க வேண்டிய 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட முறைப்படியான ஒழுக்காற்றுச் சோதனையொன்றை/1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் சபரகமுவ மாகாண சபையின் திருத்தங்களுடன் வாசிக்க வேண்டிய 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நடத்தப்பட்ட விசாரணையொன்றைப் பொருட்படுத்தும்.*

*28. இந் நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி செயற்படல் வேண்டும்.*

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி செயற் பட வேண்டும் என்பது பற்றி.

*9- 1140*